# Temporal Lobe Epilepsy

**Dr. Magesh Rajagopal (Psychiatrist)** அறம் மனநல மருத்துவமனை, திருச்சி

**Tamil Psychiatry Journal, Vol. I, Issue - 2, July - September 2025, Page 26 - 27**

மூளையின் இரண்டு பக்கவாட்டிலும் உள்ள பகுதிக்கு Temporal Lobe என்று பெயர். இந்த Temporal Lobe–ல் தான் Wernickes Area, Broca's Area, Limbic Area, Hippocampus மற்றும் Amygdala போன்ற பல முக்கிய ஆற்றல் மிக்க பகுதிகள் உள்ளன. இந்த Temporal Lobe பகுதி தான் உடலின் பல முக்கிய வேலைகளைக் கட்டுப்படுத்துகின்றது. அவை கேட்கும் திறன், பார்க்கும் திறன், முகத்தைப் பார்த்து அடையாளம் காணும் திறன், நியாபகத் திறன், மொழித்திறன் மற்றும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறன் என்பனவாகும். ஆகையால், இப்பகுதியில் ஏற்படும் பாதிப்பானது, பல்வேறு செயல்பாடுகளை பாதிக்கக்கூடும். இந்த Temporal Lobe ல் இருந்து உருவாகும் வலிப்பிற்கு Temporal Lobe Epilepsy என்று பெயர்.

மூளையின் செல்களான நியூரான்களில் தேவையற்ற மின்தூண்டுதல்கள் தானாக ஏற்பட்டு வலிப்பு உண்டாகும் என்பதனை சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்த மின் தூண்டுதல்கள் மூளையில் எந்தப் பகுதியில் இருந்து வேண்டுமானாலும் ஏற்பட்டு வலிப்புகள் உண்டாகலாம். ஆனால், Temporal Lobe பகுதியிலிருந்து தான் அதிகப்படியான வலிப்புகள் ஏற்படுகின்றன. அதாவது மூன்றில் ஒரு வலிப்பு, Temporal Lobe பகுதியிலிருந்து ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன (1)

மூளையில் ஏற்படும் பலவேறு பாதிப்புகளின் காரணமாக இந்த Temporal Lobe Epilepsy எனும் வலிப்பு ஏற்படலாம். அதாவது, Low Grade Glioma, Arteriovenous malformations, Cloacal malformation, Autoimmune or Viral encephalitis, Genetic abnormalities மற்றும் Hippocampal sclerosis போன்ற மூளையில் ஏற்படும் பாதிப்புகளால் Temporal Lobe இல் வலிப்பு நோய் உண்டாக்கக் கூடும். (2)

ஒவ்வொரு முறையும் வலிப்பு ஏற்படும் போதெல்லாம் மூளைக்குத் தேவையான Oxygen செல்வது குறைந்து, மேலும் மூளைக்குப் பாதிப்பை உண்டாக்குகின்றது

Temporal Lobe –ல் உள்ள Hippocampal பகுதிதான் நம் அன்றாட அனுபவங்கள் அனைத்தையும் நினைவுகளாகப் பதிவு செய்து வைத்திருக்கும் பகுதியாகும். இப்பகுதியில் ஏற்படும் Hippocampal Sclerosis என்ற பாதிப்புதான் இவ்வகையான வலிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. குழந்தைப் பருவத்தில் ஏற்படும் சாதாரணக் காய்ச்சலால் ஏற்படும் வலிப்பிற்கு Febrile Selzure என்று பெயர். குழந்தைப் பருவத்தில் தோன்றும் இந்த Febrile Seizure ஆனது குழந்தைப்பருவத்தின் போதே சில வருடங்களில் தானாகவே குணமடைந்து விடும். இந்த Febrile Seizure ஆனது சிறுவயதில் திரும்பத் திரும்ப ஏற்படுவதினால் மூளைக்குச் செல்லும் ஆக்சிஜன் குறைந்து, Hippocampal Sclerosis என்ற பாதிப்பை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இதுவே பிற்காலத்தில் குழந்தைகள் வளர்ந்தவுடன் Temporal Lobe வலிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது (2).

**வலிப்பு ஏற்படும் நிகழ்வினை மூன்று கட்டங்களாக பிரிக்க வேண்டும்.**

முதல் கட்டமாக வலிப்பு ஏற்படுவதற்கு சில வினாடிகளுக்கு முன்பாகவே சில அறிகுறிகள் மூலமாக நோயாளிகளால் வலிப்பு வரயிருப்பதை உணர முடியும். இதற்கு Aura என்று பெயர். இந்த Aura கட்டத்தில் பெரும்பாலானவர்களுக்கு வயிற்றில் இனம்புரியாத உணர்வு ஏற்படும். இந்த உணர்வு சற்று நேரத்திற்கெல்லாம் தானாகவே மறைந்து, நோயாளிகள் ஒரே இடத்தை வெறித்துப் பார்ப்பது; தானாகவே உதடுகள் மற்றும் வாயை அசை போடுவது, அல்லது விழுங்குவது, தேவையில்லாமல் கையை மேலே உயர்த்தி அசைப்பது, பூபரிப்பது போன்ற செயல்களைச் செய்வது போன்ற தம் கட்டுப்பாட்டை மீறிய செயல்களைச் செய்வார்கள். நோயாளிகளிடம் இந்தக்கட்ட வலிப்பின் அனுபவத்தை பற்றிக் கேட்டால், தங்களுடைய Aura-வை பற்றிய உணர்வு மாற்றங்களைப் பற்றிய அனுபவத்தை மட்டும் விவரிக்க முடியுமே ஒழிய தங்கள் சுய நினைவு இழத்தத் தருணத்தை நினைவுப்படுத்திக் கூற முடியாது (1).

Temporal Lobe வலிப்பின் அறிகுறிகள் பல்வேறு விதத்தில் வெளிப்படலாம் (3)(4)

1. வயிற்றில் ஒருவித அசவுகரியம், வாந்தி, குமட்டல், படபடப்பு, திடீர் வியர்வை, திடீர் வயிற்றுப் போக்கு போன்ற அறிகுறிகள் வலிப்பின் காரணமாக ஏற்படலாம்.

2. இயல்புக்கு மாறாக திடீரென்று காரணமின்றி கத்தி ஆர்ப்பாட்டம் செய்து ஆக்ரோஷமாக நடந்துகொள்வது.

3. மாய உணர்வுகளான துர்நாற்றம், அருவருப்பான சுவை, மாய பிம்பங்கள் தெரிவது போன்றவை காரணமில்லாமல் திடீரென்று ஏற்படுவது.

4. அதீத உணர்ச்சி வசப்படுதல் கூட வலிப்பின் வெளிப்பாடாகத் தென்படும். உதாரணத்திற்கு காரணமில்லாத அதீத பயம், கவலை, திடீர் சிரிப்பு, அழுகை போன்ற உணர்ச்சி மாற்றங்கள் ஏற்படும்.

5. தம்மைச் சுற்றி நடக்காத ஒரு நிகழ்வை தற்போது நடந்தது போல் கற்பனையாக எண்ணுவது; அல்லது என்றோ நடந்த நிகழ்வைத் தற்போது நடப்பது போல் எண்ணுவது; தெளிவற்ற குழப்ப நிலையில் இருப்பது போன்ற திடீர் மனநிலை மாற்றங்கள் Temporal Lobe வலிப்பின் காரணமாக வெளிப்படலாம்.

7. சில நேரங்களில் தங்களைப் போன்றே மற்றொரு உருவம் தம் கண்கள் முன் தோன்றுவதாகக் கூறுவார்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள அறிகுறிகள் மன நோயால் ஒருவர் பாதிக்கப்பட்டிருந்தால் கூட ஏற்படும் என்பதால். Temporal Labe வலிப்பு நோயினைப் பிரித்துப் பார்ப்பது கடினமாக இருக்கும். எனவே, இந்நோயாளிகளை எளிதாகக் கண்டுணர்ந்து, சிகிச்சை அளிப்பதில் சற்று தாமதம் கூட ஏற்படும்.

Dissociative Disorder என்ற மனநலப் பிரச்சனை சிலருக்கு அதீத மனஉளைச்சல் காரணமாக ஏற்படும். இவர்கள் திடீரென்று சாமி வந்தது போல் கத்தி, கை கால்களை பலமாக முறுக்கிக் கொண்டு சில நிமிடங்களுக்கு இருப்பார்கள். இந்த Dissociative Disorder க்கும் Temporal Lobe வலிப்பு நோய்க்கும் எந்தவொரு சம்பந்தமுமில்லை என்றாலும், மருத்துவர்களுக்கு இவ்விரண்டு நோய்களையும் எளிதாகப் பிரித்துப் பார்ப்பதில் சிரமம் ஏற்படும். ஆகையால் Temporal Lobe வலிப்பு நோய் என்று சந்தேகித்தால், அதைத் தீவிரமாகக் கண்காணித்து, உகந்த ஆய்வுகளைச் இசய்து சிகிச்சை அளித்தல் வேண்டும். சில நேரங்களில், நரம்பியல் மருத்துவர்களே Temporal Lobe வலிப்பு நோயைத் தவறாக Dissociative Disorder நோய் என்று புரிந்து கொள்ள நேரிடும் என்றால் இவ்விரண்டு நோயையும் பிரித்துப் பார்ப்பதிலுள்ள சிரமத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

Temporal Lobe வலிப்பு நோய் என்று சந்தேகித்தால் உடனடியாக EEG மற்றும் MRI போன்ற பரிசோதனைகளை செய்து, வலிப்புநோய் தானா என்பதனை உறுதி செய்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு உறுதி செய்யப்பட்டால் வலிப்பு நோய்க்கான சிகிச்சையினை எளிதாக வழங்கி விட முடியும். வலிப்பு மருந்துகளான Levetiracetam, Carbamazapine மற்றும் Oxcarbazepine போன்றவை Temporal Lobe வலிப்பு நோய்க்கான மருந்துகளாகப் பயன்படுத்தல் வேண்டும்.

## Reference:


1. Temporal lobe epilepsy: Oliver Henning, Kjell Heuser, Vilde Stangeby Larsen, Eli Berit Kyte, Hrisimir Kostov, Pål Bache Marthinsen, Arild Egge, Kristin A. Alfstad, Kari O. Nakken, Published: 30 January 2023 Tidsskr Nor Legeforen 2023. doi: 10.4045/tidsskr.22.0369
2. Walker MC. Hippocampal Sclerosis: Causes and Prevention. Semin Neurol 2015; 35: 193-200. [PubMed] [CrossRef
3. Nakken KO, Brodtkorb E. Epilepsi og religion. Tidsskr Nor Legeforen 2011; 131: 1294-7. [PubMed] [Cross Ref]
4. Henning O, Nakken KO. Epilepsirelaterte psykoser. Tidsskr Nor Legeforen 2013; 133: 1205-9. [PubMed] [Cross Ref]